தாகம் எடுப்பதற்கு முன்பே தோண்டுபவனே புத்திசாலி என்பார் ஆன்மிக ஆசான் அரவிந்தர். அதுபோல, தடை போட முடியாத தென்றலாய், எண்ணி எண்ணி பூரிக்கும் ஏந்தலாய், அன்னைத் தமிழகம் ஆராதிக்கும் அருந்தவமாய், நன்றென நினைப்பதை நானிலம் சேர்க்கும் தலைவராக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்பட்டு, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளும் தொழில் வளர்ச்சி பெற, குறிப்பாக தென் மாவட்டங்கள் தொழில் துறையில் முன்னேற பல்வேறு அறிவிப்புகளைச் செய்துள்ளார்கள்.

கடந்த காலங்களிலே வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பார்கள். இன்றைக்கு தமிழகத்திலே வடக்கும் வாழ்கிறது, தெற்கும் முன்னேறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாளை அம்மா அவர்களின் வழிகாட்டுதலால் வடக்கும் வாழும், தெற்கும் மிளிரும்; இந்தியாவும் ஒளிரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகளுக்கு மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் இணைத்து நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. (குறுக்கீடு)

4. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கலை அரசு, இந்த நேரத்தில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) அது எல்லாம் ஒன்றுமில்லை. Zero Hour எல்லாம் போய் எவ்வளவு நேரம் ஆகிவிட்டது. இப்போது எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மிகவும் முக்கியமாக இப்போது ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) இப்போது அடுத்த Business–க்குப் போய்விட்டேன். சட்டமுன்வடிவுக்குப் போகிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றுமில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கலை அரசு, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) முக்கியமாக எதுவும் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த நேரத்தில் ஒன்றுமில்லை.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவையிலிருந்து வெளியேறினார்.)